தஞ்சாவூர் மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலக வளாகத்தில் உயர்கல்வித்துறை அமைச்சர் முனைவர் கோவி செழியன் தலைமையில் தீயணைப்பு துறை மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை சார்பில் வடகிழக்கு பருவமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கை தொடர்பான செயல் விளக்கம் 23.10.2024 அன்று நடைபெற்றது. மாவட்ட ஆட்சித்தலைவர் பிரியங்கா பங்கஜம், சட்டமன்ற உறுப்பினர்கள் டி.கே.ஜி.நீலமேகம், கா.அண்ணாதுரை, என்.அசோக்குமார், தஞ்சாவூர் மாநகராட்சி மேயர் சண்.இராமநாதன், மாவட்ட வருவாய் அலுவலர் தெ.தியாகராஜன், மாவட்ட ஊராட்சித் தலைவர் உஷா புண்ணியமூர்த்தி, துணை மேயர்கள் சு.ப.தமிழழகன், மரு.அஞ்சுகம் பூபதி, உள்ளிட்ட உள்ளாட்சி பிரதிநிதிகள், அரசு அதிகாரிகள் பங்கேற்றனர்.

இந்து சமய அறநிலையத்துறை சார்பில்

அவிநாசிலிங்கேஸ்வரர் கோயிலில் 13 ஜோடிகளுக்கு திருமணம்!

அமைச்சர்கள் மு.பெ.சாமிநாதன் – என்.கயல்விழி செல்வராஜ் நடத்தி வைத்தனர்!

திருப்பூர், அக். 25 - தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலுக் கிணங்க, அவிநாசி அருள்மிகு கருணாம்பிகை உடனமர், அருள்மிகு அவிநாசிலிங்கேசுவரர் திருக்கோயிலில் இந்து சமய அறநிலையத்துறை சார்பில் 13 இணையர்களுக்கு தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர், கழக உயர்நிலை செயல் திட்டக் குழு உறுப்பினர் மு.பெ. சாமிநாதன், மனிதவள மேலாண்மைத்துறை அமைச்சர், கழக மகளிர் அணி துணை செயலாளர் என்.கயல்விழி செல்வராஜ் ஆகியார் திருமணத்தை நடத்தி வைத்து, சீர்வரிசை பொருட்களை வழங்கினர்.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் வழிகாட்டுதலுக் கிணங்க, திருப்பூர் மாவட்டம், அவிநாசி வட்டம், அவிநாசி அருள்மிகு கருணாம்பிகை உடனமர் அருள்மிகு அவிநாசிலிங்கேசுவரர் திருக்கோயிலில் 21.10.2024 திங்கட்கிழமை அன்று இந்து சமய அறநிலையத் துறையின் சார்பில் 13 இணையர்களுக்கு நடைபெற்ற திருமண நிகழ்ச்சியை மாவட்ட ஆட்சித்தலைவர் தா.கிறிஸ்துராஜ், திருப்பூர் வடக்கு மாநகர செயலாளர், மாநகராட்சி மேயர் ந.தினேஷ்குமார் முன்னிலையில் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர், கழக உயர்நிலை செயல் திட்டக் குழு உறுப்பினர் மு.பெ. சாமிநாதன், மனிதவள மேலாண்மைத்துறை அமைச்சர், கழக மகளிர் அணி துணை செயலாளர் என்.கயல்விழி செல்வராஜ் ஆகியார் நடத்தி வைத்து மணமக்களை வாழ்த்தி சீர் வரிசை பொருட்களை வழங்கினர்.

அமைச்சர் மு.பெ.சாமிநாதன் தெரிவித்ததாவது : தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இந்து சமய அறநிலையத்துறை சார்பில் கோயில் குடமுழுக்கு நிகழ்ச்சி, ஆக்கிரமிப்பில் உள்ள கோயில் நிலங்கள் மீப்பு மற்றும் அன்னதான திட்டம், திருமண நிகழ்ச்சிகள் போன்ற எண்ணற்ற திட்டங்கள் மற்றும் பணிகளை சிறப்பாக செய்து வருகிறார்கள். ஒரு இணை ஆணையர் மண்டலத்திற்கு 35 இணைகள் வீதம் 700 இணைகளுக்கு திருக்கோயில்களில் திருமணம் நடத்தப்பட்டும் என தமிழ்நாடு அரசு அறிவிக்கப்பட்டதனைத் தொடர்ந்து, தமிழ்நாடு முழுவதும் முதற்கட்டமாக இன்று 304 இணைகளுக்கு திருக்கோயில்கள் மூலம் திருமணங்கள் நடைபெற்று வருகிறது. அந்த வகையில் இன்றைய தினம், திருப்பூர் மாவட்டத்தில் அவிநாசி அருள்மிகு கருணாம்பிகை உடனமர் அருள்மிகு அவிநாசிலிங்கேசுவரர் திருக்கோயிலில் இன்று இந்து சமய அறநிலையத் துறையின் சார்பில் 13 இணையர்களுக்கு திருமண நிகழ்ச்சி நடைபெற்றது. திருமணம் என்பது ஒரு மிகப்பெரிய செயல் அதை எல்லாராலும் சிறப்பாக செயல்படுத்த முடியாத சமயங்களில் தமிழ்நாடு அரசின் இந்து சமய அறநிலையத் துறை சார்பில் இது போன்ற திட்டங்கள் மூலம் திருமணம் நடத்தி வைத்து அவர்களுக்கு தேவையான சீர் வரிசைகள் வழங்கி ஒரு சிறப்பான வாழ்க்கைக்கு அவர்கள் ஈடுபடுத்திக் கொள்வதற்கு முதலமைச்சர் தலைமையிலான தமிழ்நாடு அரசு செயல்படுத்தி வருகிறது. இந்த திருமண நிகழ்ச்சியில் மணவிழா காணும் 13 இணையர்களை வாழ்த்துவதில் மிகவும் மகிழ்ச்சியும், சந்தோஷசமும் அடைகிறோம். தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் சார்பாகவும், தமிழ்நாடு அரசின் சார்பாகவும் பல்லாண்டு காலம் மணமக்கள் சிறப்பாக வாழ வேண்டும் என்று வாழ்த்துகிறோம். அதே போல மணமக்கள் அனைத்து செல்வங்களையும் பெற்று ஒற்றுமையோடும், விட்டுக் கொடுத்து சிறப்பான ஒரு வாழ்க்கையை அமைத்துக் கொண்டு நீடூடி வாழ்ந்து இந்த நாட்டுக்கும் மக்களுக்கும் சேவை புரியக்கூடிய வகையில் திகழ வேண்டும் என்றும், அவருடைய சந்ததியினரும் இந்த சமுதாயத்திற்கு பயன்படக்கூடிய வகையிலே உருவாக்க வேண்டும் என்றும் இந்த நேரத்திலே என்னுடைய வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கிறேன்

இன்றைய தினம் நடைபெற்ற திருமண நிகழ்வில் 13 இணையர்களுக்கும் திருமாங்கல்யம் 4 கிராம் தங்கம், மெட்டி, மணமகனுக்கு வேஷ்டி சட்டை, மணமகளுக்கு முகூர்த்தப் புடவை, பீரோ, கட்டில், மெத்தை, தலையணை, போர்வை, மிக்சி, கிரைண்டர், எவர்சில்வர் பாத்திரங்கள் வகையறா, ஒரு மாதத்திற்குரிய அரிசி வகைகள் மற்றும் மளிகை பொருட்கள், சுமங்கலி பொருட்கள், மணமகன் மற்றும் மணமகளுக்கு கைக்கடிகாரம், பாய், பூமாலைகள் உட்பட மொத்தம் தலா ரூ.90,000/ மதிப்பீட்டில் தமிழ்நாடு அரசின் இந்து சமய அறநிலையத் துறையின் சார்பில் இந்த திருமண நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. இதுபோன்ற திட்டங்களை சிறப்பாக செயல்படுத்தி வரும் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு தொடர்ந்து ஆதரவு வழங்க வேண்டும் என்று அமைச்சர் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் இந்து சமய அறநிலையத் துறை திருப்பூர் மண்டல இணை ஆணையர் து.ரத்னவே ல் பாண்டியன், மாவட்ட அறங்காவல் குழுத்தலைவர் கீர்த்தி சுப்பிரமணியம், திருமுருகன் பூண்டி ஒன்றிய செயலாளர் எஸ்.ஆர். பழனிசாமி, திருமுருகன் பூண்டி நகர செயலாளர் கிருஷ்ண மூர்த்தி, அவிநாசி பேரூர் செயலாளர் திராவிடன் வசந்தகுமார், திருமுருகன்பூண்டி நகர் மன்ற தலைவர் குமார், அவிநாசி பேரூராட்சி மன்ற தலைவர் தனலட்சுமி பொன்னுச்சாமி, பேரூர் கழக முன்னாள் செயலாளர் பொன்னுச்சாமி, பனியன் சங்க பொதுச் செயலாளர் க. ராமகிருஷ்ணன், மாவட்ட அறங்காவலர் குழு உறுப்பினர்கள் ப.கலைச்செல்வி, முத்துராமன்,

மாவட்ட இளைஞர் அணி முன்னாள் துணை அமைப்பாளர் சு.செல்வரங்கம், துணை ஆணையர் செ.வ.ஹர்ஷினி, உதவி ஆணையர் பெ.தனசேகர், சிவன்மலை அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோவில் உதவி ஆணையர் மு.ரத்தினாம்பாள் உள்பட மாவட்ட, ஒன்றிய, நகர, வார்டு கழக, கிளைக் கழக நிர்வாகிகள், கழக துணை அமைப்புகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், திருக்கோவில் செயல் அலுவலர்கள் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் மற்றும் பொதுமக்கள் பலர் கலந்து கொண்டனர்.

திரும்பெரும்புதூரில் 180 கோடி ரூபாய் முதலீட்டில் இருசக்கர வாகன உற்பத்தி

தொழிற்சாலையை விரிவாக்கம் செய்ய யமஹா நிறுவனம் முடிவு!

சுற்றுச்சூழல் அனுமதி கோரி விண்ணப்பம்!

சென்னை, அக்.23- தமிழ்நாட்டில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தலைமையிலான திமுக ஆட்சி அமைந்தது முதலே தொழில் வளர்ச்சி பெருகி வருகிறது. பல நிறுவனங்கள் தமிழ்நாட்டில் முதலீடு செய்து தொழில் தொடங்கி வருகின்றன. மேலும், ஏற்கனவே உள்ள நிறுவனங்கள், பல கோடி ரூபாய் முதலீட்டில் தொழிற்சாலைகளை விரிவாக்கம் செய்து வருகின்றன. இதனால் பல்லாயிரக் கணக்கானோருக்கு வேலைவாய்ப்பு கிடைத்து வருகிறது.

அந்தவகையில், திரும்பெரும்புதூரில் ஆயிரத்து 789 கோடி ரூபாய் முதலீட்டில் செயல்பட்டு வரும் யமஹா நிறுவனம், தனது இருசக்கர வாகன உற்பத்தி தொழிற்சாலையை 180 கோடி ரூபாய் முதலீட்டில் விரிவாக்கம் செய்கிறது.

வல்லம் வடகாலில் உள்ள தொழிற்சாலையை விரிவாக்கம் செய்ய சுற்றுச்சூழல் அனுமதிகோரி தமிழ்நாடு அரசிடம் விண்ணப்பம் அளிக்கப்பட்டுள்ளது.

இத்தொழிற்சாலை மூலம் ஏற்கனவே 5 ஆயிரத்து 203 பேருக்கு வேலை வாய்ப்பு கிடைத்துள்ள நிலையில், தற்போது கூடுதலாக மேலும் 431 பேருக்கு வேலைவாய்ப்பு கிடைக்கும் என்று தகவல் வெளியாகியுள்ளது.

திராவிட முன்னேற்றக் கழகம்
மாவட்ட செயற்குழு கூட்டம்
தருமபுரி கிழக்கு மாவட்டம்

தருமபுரி கிழக்கு மாவட்டக் கழக செயற்குழுக் கூட்டம் மாவட்டக் கழக அலுவலகம் தளபதி அரங்கில் கிழக்கு மாவட்ட அவைத்தலைவர் செல்வராஜ் தலைமையில் தர்மபுரி நாடாளுமன்ற உறுப்பினர் ஆ.மணி முன்னிலையில் நடைபெற்றது.இக்கூட்டத்தில் மாவட்ட கழக செயலாளர் தடங்கம்.பெ.சுப்ரமணி துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாள் விழா,உள்ளிட்ட கழக ஆக்கப்பணிகள் குறித்து விளக்கி சிறப்புரையாற்றினார். கூட்டத்தில் நகர கழக செயலாளர் நாட்டாண் மாது,மாநில நிர்வாகிகள் . இரா.தாமரைச்செல்வன்,ஆர்.பி.செந்தில்குமார் மற்றும் மாவட்ட, ஒன்றிய,நகர,பேரூர், கழக செயலாளர்கள்,ஒன்றிய நிர்வாகிகள், நகர மன்ற உறுப்பினர்கள், கிளை கழக நிர்வாகிகள்,அணிகளின் தலைவர்கள்,துணை தலைவர்கள்,அமைப்பாளர்கள்,துணை அமைப்பாளர்கள் கலந்து கொண்டனர்.

வானத்துக்கும், பூமிக்கும் குதித்தவர்களே… எங்கே இருக்கிறீர்கள்? பதில் சொல்லுங்கள்!

கவிஞர் தமிழ்தாசன்

கழகத் தீர்மானக்குழுத் தலைவர்

பீகார் மாநிலத்தில் ஐக்கிய ஜனதா தளத்தின் தலைவர் நிதீஷ் குமார் தலைமையான ஆட்சி நடக்கிறது. ஐக்கிய ஜனதா தளம், பாஜக கூட்டணி ஆட்சி அமைச்சரவையில் பா.ஜக.வைச் சேர்ந்த சாம்ராட் சவுத்ரி, விஜயகுமார் சின்கா ஆகிய இரண்டு பேர் துணை முதல்வர்களாகவும் பங்கேற்று, கடந்த 2024 ஜனவரி 28 முதல் ஆட்சிப் பரிபாலனம் செய்து வருகிறார்கள்.

பீகார் மாநிலத்தில் மதுவிலக்கு 2016 ஆம் ஆண்டு முதல் நடைமுறையில் இருந்து வருகிறது. மது விலக்கு அமுலாகிப் பீகாரில் இருந்து வரும் நிலையில், 2022 ஆம் ஆண்டு டிசம்பரில் “சாப்ரா” எனும் பகுதியில் 50 பேருக்கு மேல் கள்ளச்சாராயம் அருந்திச் செத்துப் போனார்கள். அதேபோன்று 2023 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் “மோதிஹாரி” மாவட்டத்தில் சுற்று வட்டாரக் கிராமங்களில் கள்ளச்சாராயம் குடித்து 25 பேருக்கு மேல் பலியானார்கள்.

ஒன்றரை ஆண்டுக்குப் பின்னால், தற்போது இம்மாதத்தில் கடந்த 15 ஆம் நாள், சிவா மாவட்டத்திலுள்ள மாகர் மற்றும் அவ்ரியா கிரமப் பஞ்சாயத்துக்களைச் சேர்ந்த அப்பகுதியில் கள்ளச்சாராயம் குடித்தனால், வாந்தி, மயக்கம், நெஞ்சு எரிச்சல் உண்டாகியும், பார்வையிழப்பு போன்ற கடும் பாதிப்பு ஏற்பட்டதாலும் அவர்கள் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். அதில் சிகிச்சை பயனின்றி 25 பேருக்கு மேல் நேற்று வியாழன் வரை பரிதாபமாக உயிரிழந்துள்ளனர். மேலும், சரண், சிவான் உள்ளிட்ட 16 மாவட்டங்களில் இது வரை 36 பேர் கள்ளச்சாராயம் அருந்தி மடிந்துள்ளனர். சரண் மாவட்டத்திலுள்ள மஷ்ராக் பகுதியில் இப்ராஹிம் ஊரைச் சேர்ந்த ஐந்து பேர் கள்ளச்சாராயம் குடித்துப் பலியாகி உள்ளனர். இந்த இரு மாவட்டங்களிலும் கள்ளச்சாராயம் குடித்தவர்கள் 49க்கும் மேற்பட்டோர் மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட்டுச் சிகிச்சை பெற்று உயிருக்குப் போராடி வருபதாகச் செய்திகள் வந்துள்ளன.

“பீகார் மாநிலத்தில் மதுவிலக்கு அமல்படுத்தப்பட்டது. ஆனால் சட்ட விரோத மது வியாபாரம், கள்ளச்சாராயம் அதிகமாய்ப் புழக்கத்தில் முழுவீச்சு நடந்து வருகிறது. அதனை வாங்கி அருந்தும் மக்கள் பலரும் உயிரிழந்து வருவது தொடர் நிகழ்வாக மாறியுள்ளது. இதுவரை அங்கு 150 பேருக்கு மேல் பலியாகியுள்ளனர். மேலும், இப்படிப் பலர் சாவது தொடர் நிகழ்வாகவும் மாறியுள்ளது மதுவிலக்கை நடைமுறைப்படுத்துவதில் நிதீஷ் குமார் தலைமையிலான ஐக்கிய ஜனதா தளம், பாஜக கூட்டணி அரசு படு தோல்வியடைந்துள்ளது” என்று காங்கிரஸ் கட்சித் தலைவர்கள் கார்கே, பிரியங்கா காந்தி, இராஷ்ட்ரிய ஜனதா தளத் தலைவர் மிகித்யுஞ்சய் திவாரி உட்பட எதிர்க்கட்சித் தலைவர்கள் கடும் குற்றஞ் சாட்டியுள்ளனர். இந்தக் கள்ளச்சாராயச் சாவு நிகழ்வில் 8 பேர் மீது வழக்குப் போடப்பட்டுள்ளதாகவும், சிறப்புப் புலன் விசாரணைக் குழு (S.I.T) நியமனம் செய்யப்பட்டுள்ளது என்றும் அரசு வெளியிட்டுள்ள குறிப்பு ஒன்றில் தெரிவித்துள்ளது.

தமிழ்நாட்டில் கடந்த ஜூன் 20 அன்று கள்ளக்குறிச்சியில் நடந்த விவச்சாராய நிகழ்வில் மடிந்து போனவர்கள் பற்றி எதிர்க்கட்சிகளால் பெரிய ஆர்ப்பாட்டமே நடந்தது. அ.தி.மு.க.வைச் சேர்ந்த பாஜகவின் பாதம் தாங்கியும், பல்லக்குத் தூக்கியுமான எடப்பாடி பழனிசாமிகளும்; பா.ஜ.க கட்சியைச் சேர்ந்த தற்போது தமிழ்நாட்டை விட்டுக் குடி பெயர்ந்துள்ள இங்கிலாந்து குடிசை வாசி அண்ணா மலைகளும், தமிழ்நாட்டில் வானொலியில் ஒன்றிய அரசால் பொதிகை என்பதை நீக்கி இந்தியைப் புகுத்தி அழகு பார்த்து, அமைதி காத்து வரும் முருகன்களும், தான் ஆண்டு வந்த தெலுங்கானாவில் நடந்த கள்ளச்சாராயச் சாவைக் கண்டுகொள்ளாத தமிழிசை சௌந்தரராஜன்களும் மற்றும் பா.ம.க கட்சியைச் சேர்ந்த தமிழ்க் குடித் தாங்கியும், அதன் தலைவருமான இராமதாஸ் மற்றும் பதவி பதவி என்று முதலமைச்சர் கனவில் மிதந்து வரும் அவருடைய ஆருயிர்அன்பு மகன் அன்புமணி இராமதாசுகளும் மற்றும் அவரவர் கட்சியைச் சேர்ந்தவர்கரும் வானத்திற்கும் பூமிக்குமாகக் குதித்து வந்தார்கள்.

“…சி.பி.ஐ. விசாரணை வேண்டும்; …..ஸ்டாலின் அரசு இராஜினாமா செய்ய வேண்டும். திமுக அரசு மீது விசாரணை கமிஷன் அமைக்க வேண்டும். அமைச்சர்களை நீக்க வேண்டும்” என்று வானத்திற்கும் பூமிக்குமாகக் குதியோ, குதி என்று குதித்தனர். அது மட்டுமல்லாமல், அவர்கள் எல்லாம் ஒருவர் மாற்றி ஒருவர், கிண்டியிலுள்ள இராஜ் பவன் கதவைத் தட்டாமலேயே ஆளுநர் ரவியைச் சந்தித்து புகார் மனு அளித்தனர். இதில் சிபிஐ விசாரணை வேண்டும் ஸ்டாலின் தலைமையிலான திமுக அரசு மீது நடவடிக்கை எடுக்க வேண்டும். என்றெல்லாம் பொய் புகார் கொடுத்து அரசியல் சித்து விளையாட்டினை ஆடி வந்தார்கள்.

கள்ளக்குறிச்சி கள்ளச்சாராயச் சம்பவம் குறித்துச் “சமூக விரோதச் செயல்களை இரும்புக் கரம் கொண்டு அடக்குவோம்” என்று மாண்புமிகு தமிழ்நாடு முதல்வர் மு.க. ஸ்டாலின் சட்டமன்றத்தில் கடந்த (19062024) அன்று சொல்லியிருந்தார். அதனையொட்டிக் கள்ளச்சாராயத்தை முற்றிலும் ஒழிக்கும் விதத்தில், தமிழ்நாடு மதுவிலக்குச் சட்டம் 1937ஐ திருத்தம் செய்து, கள்ளச்சாராயம் தயாரிப்பவர்கள், விற்பனைச் செய்பவர்களுக்கு ஆயுள் வரை கடுங்காவல் தண்டனையோடு, 10 இலட்சம் ரூபாய் வரை அபராதத் தொகை உயர்த்திக் கடுமையான தண்டனைகளையும், விதிப்பதற்கான சட்டத் திருத்தம் கொண்டுவரப்பட்டுள்ளது. தமிழ்நாடு சட்டப்பேரவையில் சனிக்கிழமை (29062024) அன்று அமைச்சர் எஸ். முத்துசாமி வாயிலாக அறிமுகம் செய்து, கொண்டுவரப்பட்ட அச் சட்ட முன்வடிவு நிறைவேற்றப்பட்டுள்ளது.

விக்கிரவாண்டி இடைத் தேர்தலில் கழக அரசுக்கு எதிராகத் தீவிரமாகப் பிரச்சாரமும் செய்து வந்தார்கள். அதேபோல், சனாதனம் அரசியல பேசியும்,தமிழ்நாட்டு மக்களுக்கு எதிராக தேர்ந்தெடுக்கப்பட்ட அரசை விமர்சித்து வருபரும் கழக அரசு மக்களுக்கான தீர்மானங்கள், சட்டங்களைச் சட்டசபையில் நிறைவேற்றியும் அதற்கான ஒப்புதலை உரிய நேரத்தில் வழங்கிக் கையெழுத்து போடாமல் காலம் கடத்தி வருபவரும், ஆளுநர் மாளிகையில் அமர்ந்து வருபவருமான தமிழ்நாட்டு ஆளுநர் ஆர். என். இரவி பீகார் மாநிலத்தைச் சேர்ந்தவர். அவருடைய மாநிலத்திலேயே இன்றைக்குக் கள்ளச்சாராயம் அருந்தி 25 பேருக்கு மேல் மடிந்து போய் உள்ளனர். இதற்கு என்ன பதில் சொல்லப் போகிறார்கள் இந்த வீராதி வீரர்கள்?

பாரதிய ஜனதா கூட்டணி அரசு நடத்திவரும் அரசாங்கத்தில் பாஜக துணை முதல்வர்கள் பங்கேற்றிருக்கிறார்கள். அவர்களுடைய ஆட்சியில் நடைபெற்றிருக்கிற கள்ளச்சாராயச் சாவு குறித்து சிபிஜ விசாரணை வைப்பார்களா? ஐக்கிய ஜனதா தளத்தின் தலைவரும் பீகார் மாநிலத்தின் முதல் வருமான நிதீஷ் குமார் அவர்களையும், பாஜக துணை முதல்வர்களையும் இராஜினாமா செய்யச் சொல்லி மோடியிடம் புகார் கொடுப்பார்களா? என்பதை இங்குள்ள பா.ஜ.க.வும், அ.தி.மு.க.வும் பதில் சொல்ல முன்வர வேண்டும்!

கடந்த 50 ஆண்டுகளில் இந்தியாவில் கள்ளச்சாராயச் சாவு சம்பவங்கள் பற்றி ஒன் இந்தியா (one India) என்ற ஊடகம் ஒரு பட்டியலே வெளியிட்டு இருக்கிறது. அதில் கள்ளச்சாராயத்தால் 1976 இல் மதுவிலக்கு அமலில் இருக்கும் மாநிலமான குஜராத்தில் 100 பேருக்கு மேல் சாவு, 1978 பீகார் தன்பாத் 1981 இல் கர்நாடகா பெங்களூரு 308 பேர் சாவு, 1982 இல் வைப்பின் கேரளா 78 பேர், 1984 இல் ஹரியானா 44 பேர்,1986 இல் குஜராத் 108 பேர், 1987 இல் குஜராத் 200 பேர், 1991 - தில்லி, 1992 இல் ஒடிஸா - கட்டக் 200 பேர்க்கு மேல், 2001 இல் மராட்டியம் 27 பேர், 2001 இல் தமிழ்நாடு 53 பேர் (ஜெயலலிதா ஆட்சி), 2004 இல் மும்பையில் 87 பேர், 2006 இல் போலீசார் 22 பேர், 2008 இல் கர்நாடகம் / தமிழகம் 148 பேர், 2009 இல் கொல்கத்தா 27 பேர், 2009 இல் உத்தர பிரதேசம் 29 பேர்,

2009 இல் குஜராத் 136 பேர், 2010 இல் கேரளா 23 பேர், 2011 இல் ஆந்திரா 17 பேர், 2011 இல் மேற்கு வங்கம் 170 பேர், 2012 இல் ஆந்திரா 17 பேர், 2012 இல் ஒடிசா கட்டக் 31 பேர், 2012 இல் பஞ்சாப் 18 பேர், 2013இல் உத்தரப்பிரதேசம் 40 பேர், 2015 இல் மும்பை மலாட் 90 பேர், 2019 இல் உத்தரப்பிரதேசம் / உத்தரகாண்ட் 100 பேருக்கு மேல், 2019இல் அசாம் 30 பேர், 2020 - தமிழ்நாடு, 2020 - பஞ்சாப் - அமிர்தசரஸ், 2022 - குஜராத் - அகமதாபாத், 2022 - பீகார், 2023 -இல் தமிழ்நாடு - மரக்காணம், 2024 இல் தமிழ்நாடு 57 பேர்

இந்த மாநிலப் பட்டியலில் பாரதிய ஜனதா கட்சி ஆளும் மாநிலங்களும் இருக்கின்றன. கள்ளக்குறிச்சி கள்ளச்சாராயச் சாவு குறித்து சிபிஜ விசாரணை கேட்டு ஓலமிடும் அரிச்சந்திர மகாராஜா போல முகாரி ராகம் பாடிவரும் எடப்பாடிகள், இராமதாசுகள், அன்புமணிகள், அண்ணாமலைகள், தமிழிசைகள், எச்.ராஜாக்கள், குஷ்புகள், வானதி சீனிவாசன்கள், பிரேமலதாக்கள் போன்றவர்கள் இதற்குப் பதில் சொல்ல வேண்டும்! பசித்தவன் தின்னாதது இல்லை. பகைத்தவன் சொல்லாதது இல்லை என்பது போல இவருடைய நாடகங்கள் வீதிக்கு வருகின்றன.

முன்னாள் அமைச்சர் திண்டுக்கல் சீனிவாசன் தனது ஊரில் ஆர்ப்பாட்டம் ஒன்றில் கலந்து கொண்டு பேசிய போது, ஓர் உண்மையைக் கூறி அதிர்ச்சி தந்துள்ளார். “நான் வனத்துறை மந்திரியாக இருந்த நாளில், கல்வராயன் மலைக்குப் போன போது, அங்கு எங்குப் பார்த்தாலும் அடுப்பு எரிந்து கொண்டிருந்தது. என்னடான்னு கேட்டேன். அங்கே எல்லாரும் சாராயம் காய்ச்சுறாங்க….” இப்படி எடப்பாடி முதலமைச்சராக இருந்த அதிமுக ஆட்சியில், கள்ளச்சாராயம் காய்ச்சும் தொழில் கொடி கட்டிப் பறந்தது என்று அவரது அமைச்சரவையில் இருந்த மந்திரியே ஒப்புதல் வாக்குமூலம் தந்திருந்தார். அவர் வெளியிட்ட செய்தி பற்றி எடப்பாடி பழனிசாமி என்ன பதில் கூறிக் கிழி கிழின்னு கிழிக்கப்போகிறார்?

அப்படியானால் எடப்பாடி தலைமையிலான அதிமுக ஆட்சியில் அப்படிச் சாராயம் காய்ச்சியவர்கள் மீது அமைச்சருக்குத் தகவல் தெரிய வந்ததும் எந்த நடவடிக்கை எடுக்க இல்லையே ஏன்?

அ.தி.மு.க ஆட்சியில் கள்ளச்சாராயம், சாவுகளே இல்லையா? அதுபற்றி ஜெயலலிதாவே வாக்குமூலம் தருகிறார். ஜெயலலிதா முதல்வராக இருந்தபோது, கோவையில் காவல்துறையினரால் கள்ளச் சாராய உற்பத்தித் தொழிற்சாலை ஒன்று கண்டுபிடிக்கப்பட்டது. அது குறித்து எதிர்க்கட்சிகளும், ஏடுகளும் கேள்வி எழுப்பி வந்தனர். சட்டமன்றத்தில் காவல்துறை மானியக் கோரிக்கை (19.3.1992) விவாதத்தில் கலந்துகொண்டு பதில் அளித்து ஜெயலலிதா பேசிய போது, காவல்துறை அதிகாரிகள் மீது கடுமையான முறையில் குற்றச்சாட்டுகள் வைத்தார்.

“….சில பிரச்சனைகள் என் மீது பழி சுமத்தப்படுகிறது. கோவையில் கள்ளச்சாராயத் தொழிற்சாலை கண்டுபிடித்த போலீஸ் அதிகாரிகளை மாற்றப்பட்டதாகக் கூறினார்கள். அந்தப் போலீஸ் அதிகாரிகள் சில முக்கிய ஆவணங்களை அழித்து விட்டார்கள். அந்த ஆவணங்களில் அவர்கள் இலஞ்சம் வாங்கிய விவரம் இடம் பெற்றிருக்கிறது. அவர்களைச் சஸ்பெண்ட் செய்திருக்க வேண்டும். ஆனால், ஆதாரங்கள் அழிக்கப்பட்டு விட்டதால் தான், மாறுதல் செய்து இருக்கிறோம். அவர்களுக்குச் சில அரசியல் கட்சிகள் ஆதரவு இருக்கின்றன. எல்லாவற்றையும் விசாரித்து, தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும், மக்களுக்குப் பல வாக்குறுதிகளைக் கொடுத்திருக்கிறோம். நாம் மீண்டும் அடுத்தடுத்த தேர்தலில் மக்களைச் சந்திக்க வேண்டியவர்களாக இருக்கிறோம். ஆனால், அரசு அதிகாரிகள் அப்படி அல்ல; அவர்களுக்கு 58 வயது வரையில் பணி உத்தரவாதம் உள்ளது. அவர்கள் யாருக்கும் பதில் சொல்ல வேண்டிய நிலையில் இல்லை. இப்படிப்பட்டவர்களை வைத்துக்கொண்டு ஆட்சி நடத்துவது கடினம். யாரையும் குற்றம் சொல்ல வேண்டும் என்பதற்காக இதைச் சொல்லவில்லை.

“ஒரு இலாக்காவிலே தவறு நடந்தால் அதற்குப் பதில் சொல்ல வேண்டியது மந்திரிகள் தான் தவிர, அதிகாரிகள் அல்ல. மந்திரிதான் பொறுப்பு ஏற்க வேண்டும்; அதிகாரி பொறுப்பேற்க மாட்டார்கள். மத்திய அரசு இது குறித்து யோசித்து ஒரு முறையை வகுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதிகாரிகள் தவறு செய்தால் என்ன செய்ய முடியும்? வேறு இடத்திற்கு மாற்றலாம்; அவ்வளவுதான். ஒரு போலீஸ் அதிகாரி ஒரு இடத்தில் கள்ளச்சாராய வியாபாரிகளிடம் இலஞ்சம் வாங்கினால், அவரை வேறு இடத்திற்கு மாற்றலாம்; அவர் மாற்றப்பட்ட இடத்திலும் அதே தவறு செய்யமாட்டார் என்பது என்ன நிச்சயம்? மாநிலத்தை விட்டு அனுப்பினால் தான் அவர் பயப்படுவார், இப்படிப்பட்டவர்களை வைத்துக்கொண்டு நல்ல முறையில் ஆட்சி நடத்துவது மிக, மிக கடினமுள்ள நிலையைத்தான் எடுத்துச் சொன்னேன். யாரையும் புண்படுத்த வேண்டும் என்பதற்காக இதைச் சொல்லவில்லை….” இப்படி எடப்பாடியின் தலைவி அம்மா ஜெயலலிதா, 1992 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 19 ஆம் தேதி வியாழக்கிழமை சட்டமன்றத்தில் காவல்துறை மானியத்தில் பேசினார்

தனது ஆட்சியில் தவறு செய்த அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்காமல் மாறுதல் மட்டும் செய்து தன் வருத்தத்தை தெரிவித்துள்ளார். கண்டுபிடித்த மாவட்ட பெரிய அதிகாரியை ஒரு வாரத்திற்குள்ளாக மாற்றப்பட்டார். கண்டுபிடிக்கப்பட்டது வெறும் கள்ளச்சாராயம் அல்ல; தமிழ்நாடு மட்டுமல்லாமல், அண்டை மாநிலங்களான கர்நாடகம் கேரளாவுக்குச் சப்ளை செய்யக்கூடிய “மிகப்பெரிய கள்ளச் சாராய உற்பத்தித் தொழிற்சாலை இயங்கி வந்துள்ளது என்ற பெரிய உண்மையைச் சட்டசபையில் ஜெயலலிதா சொன்னது குறித்துப் பெங்களூரில் இருந்து வெளிவந்த “எக்னாமிக் டைம்ஸ்” எனும் ஏடு (25031992) விமர்சனம் செய்து கட்டுரை ஒன்றைத் தீட்டியிருந்தது. எந்த முதலமைச்சரும் இப்படிச் சட்டமன்றத்தில் அதிகாரிகளைத் தாக்கிப் பேசியது கிடையாது; இப்படிச்

சட்டமன்றத்தில் முதன் முதலில் பேசிய முதலமைச்சர் ஜெயலலிதாவாகத் தான் இருக்க முடியும். தனது ஆட்சியில் கள்ளச்சாராயம். காய்ச்சும் தொழிற்சாலை கோவையில் இருந்திருக்கிறது. இலஞ்சம் வாங்கி அதிகாரிகளே அனுமதித்திருக்கிறார்கள் என்று உண்மையை ஒத்துக் கொண்டு ஜெயலலிதா பேசியுள்ளது பற்றி எ. பழனிசாமிகளே என்ன சொல்லப் போகிறீர்கள்?

இது மட்டுமா இன்னும் இருக்கிறது. ஜெயலலிதா முதலமைச்சராக இருந்தபோது, 2001 செப்டம்பர் 9 அன்று அம்பத்தூர் அருகே உள்ள மீனாம்பேட்டில் விஷச்சாராயம் குடித்து 13 பேர் செத்துப் போனார்கள். அதன் பின்பு கோட்டூரில் விஷச் சாராயம் அருந்தி 30 பேர் சாவூருக்கு அனுப்பப்பட்டனர். அதற்குப் பின்னரும் கடலூர் மாவட்டத்தில் நத்தம், மேல அருங்குணம், இராயர் பாளையம், உறையூர் உள்ளிட்ட ஊர்களில் மொத்த 52 பேர் கள்ளச் சாராயத்திற்குப் பலியானார்கள். இப்படிக் குறுகிய காலத்திற்குள்ளாக நூற்றுக்கும் மேற்பட்டவர்கள் விஷச் சாராயத்திற்குப் பலியான சம்பவங்கள் உண்டு. என்ன வேடிக்கை என்றால் 2001 ஆம் ஆண்டு ஜெயலலிதாவின் மது ஒழிப்புப் பிரகடனத்திற்குப் பிறகு, 2,75,000 பேர் மீது வழக்குப் பதிவு செய்யப்பட்டது. அதில் 62 ஆயிரம் பேர் பெண்கள் என்ற புள்ளி விவரத்தை வெளியிட்டு அதிர்ச்சியும், ஆச்சரியமும் தரும் வகையில் அரசின் சார்பில் ஓர் அதிகாரி தெரிவித்து இருந்தார்.

உப்பிலியாபுரத்தில் சாராயம் காய்ச்சிய சிலரை அவ்வூர் காவல் நிலையத்திற்குக் கொண்டு சென்று சிறை வைக்கப்பட்டார்கள். அவர்களை விடுவிக்க அத்தொகுதியின் அதிமுக சட்டமன்ற உறுப்பினராக இருந்த உப்பிலியாபுரம் இரவிச்சந்திரன், காவல் நிலையம் சென்று, அதிகாரிகளோடு சண்டை போட்டு, அடைக்கப்பட்டு இருந்த அவர்களை மீட்டு வந்தார் . ஏடுகளில் வெளியிடப்பட்ட இச்செய்தி அறிந்த ஜெயலலிதா, தனது வீட்டிற்கே சட்டமன்ற உறுப்பினர் இரவிச்சந்திரனை வரவழைத்துச் சாதிப் பேரைக் கூறிக் கன்னத்தில் அறைந்தார் எனும் செய்தியை முன்னாள் ஒன்றிய மாநில அமைச்சரும், காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்தவருமான எஸ்.திருநாவுக்கரசர் தனது நூலிலேயே எழுதி வெளியிட்டுள்ளார். அது மட்டுமல்லாமல், 2011 2021 பத்தாண்டுக் கால அதிமுக ஆட்சியிலும் கள்ளச்சாராயச் சாவுகள் நிகழ்ந்திருக்கின்றன. இதற்கான பட்டியல்கள் அரசிடமே உள்ளன.

இந்தச் சோக நிகழ்வுகள், துயரமான சம்பவங்கள் குறித்து யாரும் நியாயப்படுத்திட முடியாது. அதேவேளை நடைபெற்ற சம்பவத்திற்குச் சிபிஜ விசாரணை வேண்டும் என்றும் கழக ஆட்சியைக் கலைக்கப்பட வேண்டும் என்றும் ஆளுநரை சந்திப்பது போராட்டங்கள் நடத்தி கொச்சைப்படுத்தி பேசுவது என்பது எந்த விதத்தில் நியாயமாகும்? கடந்த கால வரலாறுகளை நடந்து கொண்டிருக்கிற வரலாறுகளையும் சிந்தித்து பார்க்க வேண்டும்.

விஷ சாராயச் சாவு நிகழ்வை எதிர்த்து சென்னை உண்ணாவிரதத்தில் கலந்து கொண்ட எடப்பாடி பழனிச்சாமி தன்னைச் சட்டமன்றத்தில் விட்டிருந்தால் கிழி, கிழி எனக் கிழித்து விடுவேன் என்பதால், தனக்கு வாய்ப்பு தர மறுக்கிறார்கள் என்று விரோதி வீரர் வேஷம் போட்டுப் பேசியும், கட்டபொம்மன் நாடக நாயகன் சிவாஜி போல நடித்தும் காட்டினார். மோடியின் ஒன்றிய அரசில் வாய், மெய் பொத்தி அடிமை வேலை செய்து மாநில உரிமைகளை விட்டுக் கொடுத்துத் தாரை வார்த்த இந்த வீராதி வீரர், சோரம் போன சோகக் கதைகள் எல்லாம் தமிழ்நாட்டு மக்களுக்கு நன்றாகவே தெரியும்.

கூவத்தூர் மண்ணைக் குழி பறிக்கும் அளவுக்குச் சசிகலா காலில் விழுந்து மண்புழுக்கள் தோற்றுப் போகும் நாடகத்தில் முதலமைச்சர் பதவி பெறுவது எப்படி என்ற அபார வித்தையைக் கற்ற எடப்பாடிகளின் வீரம் பற்றிக் கேட்டால், பக்கத்தில் இருக்கும் திண்டுக்கல் சீனிவாசன்கள் சொல்லுவார்களே?….

மதுவிலக்கு நடைமுறையில் உள்ள குஜராத் மாநிலத்தில் காந்தி பிறந்த போர்ப்பந்தர் எனும் ஊரில் பெட்ரோல் பங்கில் பம்பு மூலம் கள்ளச்சாரயம் விற்பனை நடந்தது. அது மட்டுமல்லாமல் பாஜக ஆளும் அதே மாநிலத்தில் வெளிநாட்டு மது வகைகள் விற்பனை செய்ய அனுமதிக்கப்பட்டு மதுவிலக்கை தளர்த்தியுள்ளது ஏன் என்பதை பாஜக போன்ற கட்சிகள் சொல்ல முன்வருமா?

தற்போது மதுவிலக்கு அமுல்படுத்தப்பட்டுள்ள பீகாரில் நடைபெற்ற கள்ளச்சாராயம் அருந்தி 30 பேர் மரணமடைந்திருக்கிறார்கள். எழுபது பேர்களுக்கு மேல் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு உயிருக்குப் போராடிவருகிறார்கள். இதனைப்பற்றி அதிமுகவும் பாஜகவும் பாமக, த.மா.க போன்ற கட்சித் தலைவர்கள் பீகார் அரசை கலைக்கச் சொல்லுவார்களா? மோடியைச் சந்தித்து சிபிஜ விசாரணை கோருவார்களா? தமிழ்நாட்டு ஆளுநர் ஆர்.என். இரவியை சந்தித்து விபரம் சொல்லுவார்களா? விளக்கம் கேட்பார்களா?